DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | ஆனந்தன் |
| Father's Name | மாணிக்கமுதலியார் |
| Village | செட்டியப்பனூர் |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | விவசாயம் |
| Age | 75 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **25.06.2025**

**O.S.No. 79/2017** **பி.வா.சா.3**

**குறுக்கு விசாரணை**

1. வழக்கில் மூன்றாம் பிரதிவாதி அழைத்ததின் பேரில்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதி இருவருமே என்னுடைய உறவினர்கள் தான் என்றால் சரிதான். வாதிக்கும் எங்களுக்கும் கடந்த பத்து வருடமாக சொத்து சம்பந்தமான பிரச்சனை உள்ளது என்றாலும் அதனால் பேச்சு வார்த்தை இல்லை என்றாலும் அதனால் விரோதம் இருக்கிறது என்றாலும் சரிதான். அதனால் வாதிக்கு எதிராக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. மாணிக்க முதலியார் 1982-ல் இறந்த பிறகு அவருடைய ஆண் வாரிசுகளான முனிரத்தினம், வடிவேலு, ராமன், ஆனந்தன் (நான்) ஆகியோர் வீட்டு மனை சொத்தினை எங்களுக்கும் பிரித்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி ராமன் என்பவருக்கு வீட்டு மனை சர்வே எண்.161, 162/2

இதிலுள்ள 3400 சதுரடி நிலம் தனியாக ஒதுக்கப்பட்டு அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

3. மேற்படி முனிரத்தினம் என்பவருக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் மேற்கு புறமாக ஒதுக்கப்பட்டது சர்வே எண் நினைவில்லை. மேற்படி முனிரத்தினம் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட பாதத்தின் நான்கு புற எல்லை விவரம் தெரியுமா என்றால் தெரியும் சிங்காரம் ராஜகவுண்டர் வீட்டிற்கு வடக்கே ராமன் பாகத்திற்கு மேற்கு, ராஜவீதிக்கு கிழக்கு, வடிவேலு பாகத்திற்கு தெற்கு.

4. மேற்படி வடிவேல் என்பவருக்கு செட்டியப்பனூர் கிராமத்தில் பிள்ளையார் கோவில் தெருவில் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளவாறு கதவு எண்.1/E–11 பாகம் ஒதுக்கப்பட்டதா என்றால் சரிதான், தற்போது எனக்கு கதவு எண் நினைவில்லை.

5. மேற்படி எனக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தற்போது நினைவு இல்லை. இவ்வழக்கில் வாதி எந்த சர்வே எண்ணிற்கு மற்றும் விஸ்தீரணத்திற்கு வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சர்வே எண்.162/2 விஸ்தீரணம் நினைவில்லை. மேற்படி சர்வே எண்.162/2 ராமனுக்கு ஒதுக்கப்பட்டதா என்றால் சரியல்ல. ராமனுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் 162/2 மற்றும் அதன் விஸ்தீரணம் நினைவில்லை. செக்பந்தி விவரம் முனிரத்தினம் பாகத்திற்கு கிழக்கு, கோபால் வீட்டிற்கு வடக்கே, ஆனந்தன் பாகத்திற்கு தெற்கே, பாகத்திற்கு போக வர 20 அடி அகல வழிக்கு மேற்கே.

6. மேற்படி நான் கூறும் விவரம் தவறு என்றாலும் வழக்கில் உள்ள விவரம் தான் சரி என்றாலும் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பு வாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல, ஏற்கனவே என்னுடைய தகப்பனாரின் பெயரில் தான் இருந்தது. மேற்படி வாதியின் மின் இணைப்பு என்னுடைய தகப்பனாரின் பெயரில் தான் உள்ளது என்று வழக்கில்

ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13–ல் குறிப்பிட்டுள்ளவாறு வாதியின் பெயரில் தான் மின் இணைப்பு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நான் கூறுவது போல் அந்த மின் இணைப்பு என்னுடைய தகப்பனார் பெயரில் இருந்திருந்தால் பிரதிவாதிகள் தரப்பில் அது சம்பந்தமாக ஆவணம் தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் பத்தி 5–ல் நான் நான் கூறியது போன்று "வாதியின் மாமனார் மாணிக்க முதலியார் பாக்கு வியாபாரம் செய்து கடனாளி ஆகிவிட்டார் என்பதும் அதனை வசூல் செய்ய வழக்கு சொத்தினை ஒரு பக்கிரிசாமி என்பவர் வழக்கு தொடர்ந்து வழக்கு சொத்தினை ஜப்தி செய்து மேற்படி வழக்கு சொத்தை வாதி என் கணவர் ராமன் என்பவர் ஏலம் கொடுத்தார் என்பது பொய்" என்பதை நிரூபிக்கும் விதமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது

8.என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.20 பக்கிரிசாமி தாக்கல் செய்த நிறைவேற்று மனுவில் கொடுக்கப்பட்ட ஏல நோட்டீஸ் மூலம் வழக்கு சொத்து ஜப்தி செய்ய கொடுக்கப்பட்ட நோட்டீஸ் என்றால் அதுபற்றி மாணிக்க முதலியாரின் வாரிசுகளான எங்கள் நால்வருக்கும் தெரிந்திருக்கும்.

9. எனது தகப்பனார் ஏற்படுத்திய பாக கூர்சீட்டில் சொத்து சம்மந்தமான கடன் ஏதேனும் இருப்பின் அது உரிய பாகதாரர்களுக்கு சாரும் என்ற வாசகம் இடம் பெற்றிருக்கிறது என்றால் சரியல்ல, அந்த கூர்சீட்டு தயாரித்தவர் ஆம்பூர் சார்ந்தவர் மற்றும் சாட்சி கையெழுத்து வேறு கிராமத்தை சார்ந்தவர் போட்டிருப்பதால் அந்த கூர்சீட்டு எங்களை கட்டுப்படுத்தாது.

10.என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.21 நிறைவேற்று மனுவில் Full Satisfaction Record என்று மேற்படி மனு முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி

நிறைவேற்று மனுவில் வழக்கு சொத்தின் மீது ஏற்பட்ட கடனை அடைப்பதற்காக வாதியின் கணவர்தான் முழுதொகையையும் செலுத்தினார் என்றால் சரியல்ல.

11. கடந்த 28.05.1986 –ல் வாதியின் கணவர் வாதிக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ள தானப்பத்திரம் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. கடந்த 26.05.2014–ல் வாதி தன் மகன் பிரவீனுக்கு ஒரு தான பத்திரம் எழுதி வைத்துள்ளார் அந்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேன் என்றால் இல்லை, 2014–ம் வருடமே சுமார் 3 மாதங்களுக்கு பிறகு எழுதி வைத்த விவரத்தை கேள்வி பட்டேன்.

12. மேற்படி பத்திரம் செல்லாது என அந்த வருடமே நடவடிக்கை எதாவது எடுத்தேனா என்றால் மேற்படி பாகம் எனது பாகம் இல்லை என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி வழக்கு சொத்து சம்மந்தமாக ஏற்படுத்தப்பட்ட பத்திரங்கள் செல்லாது என கோர எந்தவித முகாந்திரமும் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வாதி எந்த நிகழ்விற்காக அல்லது காரணத்திற்காக தொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது இறந்த 1–ம் பிரதிவாதி பாகத்தை தன்னுடைய பாகம் என்று கோரி வாதி வழக்கு தொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் மின்இணைப்பு, தண்ணீர் குழாய் இணைப்பு, வீட்டுவரி ரசீது அனைத்தும் வாதியின் பெயரில் இருக்கிறது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் எதுவும் நான் பார்த்ததில்லை.

13. என்னுடைய முதல் விசாரணையில் பத்தி 13–ல் குறிப்பிட்டுள்ளவாறு பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

14. முனிரத்தினம் என்பவர் இறந்த பிறகு தன்னுடைய மனைவியின் பெயரில் சுமார் 69 செண்ட் நிலம் தானப்பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி இறந்த 1–ம் பிரதிவாதி வடிவேலு தனக்கு வந்த பாகத்தை தன்னுடைய

மகனான சரவண பாபு பெயரில் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

15.மேற்படி எனக்கு வந்த பாகத்தையும் எனது மனைவி மற்றும் மகன் பெயரில் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல, ராமன் என்பவர் போர்ஜெரியாக மொத்த கூட்டுகுடும்ப சொத்தை விற்றுவிடுவார் என்று ஐயப்பட்டு எனது மனைவியின் பெயரில் மட்டும் தான் கூட்டுகுடும்ப சொத்தில் எனது பாகமான 54 செண்ட் நிலத்தை எழுதி வைத்துள்ளேன்.

16.மேற்படி ராமன் என்பவர் போர்ஜெரியாக நிலத்தை எழுதிக்கொள்ளவில்லை என்றாலும் தனக்கு வந்த பாகசூர்சீட்டின் மூலமாக வந்த நிலத்தை தான் எழுதிக்கொண்டார் என்றால் சரியல்ல.

17.எனது தகப்பனாருக்கு பிறந்த என்னை உட்பட நான்கு ஆண் வாரிசுகளும் எனது தகப்பனாரின் பெயரில் உள்ள அனைத்து சொத்தையும் எங்களுக்குள் பிரித்து ஆண்டுஅனுபவித்து வருகிறோம் என்றாலும் அனைத்து சொத்தும் உரிமை பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

18.வீட்டு மனை எங்கள் நால்வருக்கும் இடையே வாய்மொழியாக பிரித்துக்கொண்டோம் என்றாலும் வீட்டுமனைக்கும் O.S.39/2009 உள்ள நிலத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான்.

19.வழக்கில் 3-ம் பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இவ்வழக்கு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

*ESHWAR VISWANATHAN*
DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Date: 2025.07.05 18:14:03 +0530

District Munsif,

Vaniyambadi.